# நாவலர்



# குறள்நெறிக் காவலர்

# நாவலர் - குறள்நெறிக் காவலர்

## டாக்டர் நாவலர் தீட்டிய திருக்குறள் தெளிவுரைக்கு திரு சி. நல்லரசு தீட்டிய மதிப்புரை

அறத்தை உணர்ந்தவர். ஆட்சியில் அமர்ந்தவர். இன்பத்தை நுகர்ந்தவர். மன்னராட்சிக் காலத்தில் நீதிநெறி நின்று இலக்கியத்தில் நிலைத்த புகழ் பெற்ற மாமன்னன் பெயரைத் தாங்கி, தானும் தலைநிமிர்ந்து தமிழினம் தலைநிமிர எழுச்சியூட்டும் எடுப்பு மிக்க உரையை மிடுக்காக மேடையில் முழங்கும் நாவலர் — மக்களாட்சிக் காலத்தில் அமைச்சராய் அமர்ந்து ஆட்சியிய்லை அறிந்தவர். ஆட்சியை இயக்கியவர். இலக்கிய உலகில் பொன்றாப் புகழுடன் விளங்கும் திருக்குறளின் பெருமை - நின்று நிலைபெற அரியதோர் பணியினை ஆற்றியுள்ளார்.

நெல்லையில், 1960-ஆம் ஆண்டுச் சிறப்புக் கூட்டம் ஒன்றில் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் திருக்குறள் பற்றி ஆற்றிய இலக்கிய உரையின்போது அதைக் கேட்டுச் சுவைத்துச் சிறப்புக் கூட்ட அறையை விட்டு வெளியே வந்த இலக்கிய ஆர்வலர் ஒருவர் — **'திருக்குறளை எழுத வள்ளுவர் பிறந்தார். அதை விளக்கிப் பேச இவர் பிறந்திருக்கிறார். இவர் இப்படி விளக்கவுரை தருவதற்கென்றே திருவள்ளுவர் திருக்குறளை எழுதிவிட்டுப் போயிருக்கிறார்'** என்று மகிழ்ந்து, மனந்திறந்து புகழ்ந்து பேசினார். விளக்கவுரை ஆற்ற மட்டுமல்ல, விளக்கவுரை எழுதவும், அதுவும் மற்றவர்களின் விளக்கவுரைகளில் உள்ள மாசுகளை, மறுக்களை, மயக்கங்களை நீக்கித் தெளிவுரையும் எழுதவல்லார் என்பதை நாவலர் இப்போது நிலைநாட்டியுள்ளார்.

திருக்குறள் இருபதாம் நூற்றாண்டுக்கு மட்டுமல்ல. இனி எந்த நூற்றாண்டுக்கும்' எந்தத் தலைமுறைக்கும் ஏற்ற அரியதோர் அறநூல் என்பதை நிலைநிறுத்தியுள்ளார்.

**தந்தை பெரியாரின் பகுத்தறிவு வீச்சும், பேரறிஞர் அண்ணாவின் ஆழ்ந்து அகன்று பரந்து விரிந்த ஆய்வுத் தெளிவும் நாவலரது நூலின் ஒவ்வொரு பக்கத்திலும் ஒளி வீசுகிறது.**

திருக்குறளில் இரண்டாயிரம் ஆண்டுகளாக இருந்து வந்த, மற்றவர்களால் மாற்றிடமுடியாமல் அவர்களை மருட்டி வந்த 'கடவுள் வாழ்த்து' என்ற அதிகாரத்தின் பெயரையே நீக்கியிருக்கிறார் என்றால், அது அவரது நெஞ்சத்தின் அழுத்தம், அஞ்சாமை, தெளிவு, துணிவு ஆகிய அனைத்தையுமே ஒருசேரக் காட்டுகிறது.

**நாவலரின் மென்மைக்குள் அடங்கியுள்ள இந்தத் தன்மை அவர் பூவுக்குள் ஒரு பூகம்பம், தென்றலுக்குள் ஒரு புயல் என்பதுபோல் உள்ளது.**

திருக்குறளின் உரையாசிரியர்கள் தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பருதி, திருமலையர், மல்லர், பரிப்பெருமாள், காளிங்கர், பரிமேலழகர் ஆகியோரின் வரிசையில் இடம் பெற்று ஒளிர்பவர், தெளிவு தருபவர் என்று இந்நாடு புகழ் நன்னிலைக்கு உரியவராகவும் நாவலர் விளங்குகிறார்.

பரிமேலழகர் முதல் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார், புலவர் குழந்தை. தேவநேயப் பாவாணர், புலவர் அ.கு. ஆதித்தர், சிந்தனைச் செம்மல் கு.ச. ஆனந்தன், பேராசிரியர் கா.சுப்பிரமணிய பிள்ளை வரை அனைவரும் எழுதியுள்ள அத்தனை உரைகளையும் ஊன்றிப் படித்து, ஒப்புநோக்கி அவற்றுள் ஏற்புடையனவற்றை ஏற்று, அல்லனவற்றை அகற்றிப் பின்னர் தன்னுரையைத் தனித்தன்மையுடன் தந்துள்ளார்.

பாரெங்கும் பரவலாக ஏற்கப்பட்டுள்ள உரை பரிமேலழகர் உரைதான். அந்த உரையைப் பரப்புவதும், எளிமைப்படுத்துவதும், இனிமைப்படுத்துவதுந்தான் இதுவரை பொழிப்புரையும், தெளிவுரையும் தந்துள்ள அனைவரும் ஆற்றியுள்ள பணியாகும்.

ஆனால், நாவலர் அவற்றை எல்லாம் புறக்கணிக்காமல், போற்றுவன போற்றி, அகற்றுவன அகற்றி, மாசு நீக்கி, மருள்நீக்கி இத்தெளிவுரையைத் தந்துள்ளார். ஏற்கெனவே வந்துள்ளனவற்றில் எளிமையும், இனிமையும் மிக்கது, அதிக அளவு, அதிக காலம் பரவி நிற்பது டாக்டர் மு.வ. எழுதிய தெளிவுரையே ஆகும். ஆனால், அதுவும் பரிமேலழகர் உரையை மறுக்கவில்லை.

பரிமேலழகர் வரை அத்துணை உரையாசிரியர்களும், வடமொழி இலக்கியங்களையும், அவை தந்துள்ள கருத்துக்களையும், குறிப்பாக மனுதர்மத்தையும் ஏற்றுக் கொண்டு அந்தப் பின்னணியிலேயே திருக்குறளைப் பார்த்தனர். படித்தனர். பதவுரையும் பொழிப்புரையும் படைத்தனர்.

**நாவலர் அந்தப் போக்கிலிருந்து விலகி நின்று திருக்குறளை நோக்குகிறார்.**

பரிமேலழகர், திருக்குறளுக்கு உரை எழுதத் தொடங்கும்போதே, எடுத்த எடுப்பிலேயே,

'அறமாவது, மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழித்தலும் ஆம்' என்றும், 'ஒழுக்கமாவது, அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசாரியம் முதலிய நிலைகளினின்று, அவ்வவற்றிற்கோதிய அறங்களின் வழுவாது ஒழுகுதல்' என்றும்,

'அதுதான் (அவ்வொழுக்கம்) நால்வகை நிலைத்தாய் வருணந்தோறும் வேறுபாடுடைமையின், சிறுபான்மையாகிய அச்சிறப்பு இயல்புகள் ஒழித்து, எல்லார்க்கும் ஒத்தலின் பெரும்பான்மையாகிய பொதுவியல்பு பற்றி இல்லறம் துறவறம் என இருவகை நிலையால் கூறப்பட்டது' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பரிமேலழகரின் இக்கருத்தினைச் சுட்டிக் காட்டி விட்டுத்தான், நாவலர் தமது தெளிவுரையைத் தொடங்குகிறார்.

'திருக்குறள். ஒரு குறிப்பிட்ட நாட்டினர்க்கோ, சமயத்தினர்க்கோ, குழுவினர்க்கோ, வகுப்பினர்க்கோ, நிறத்தினர்க்கோ, மொழியினர்க்கோ, இயக்கத்தினர்க்கோ, உரிமையுடைய ஒரு நூல் அல்ல; அது, உலகம் தழுவிய மக்கள் எல்லோராலும் பொதுவாக ஏற்றுக் கொள்ளத் தக்கதாய்ப் போற்றுவதற்குரியதாய், பின்பற்றத்தக்கதாய் அமைந்த பேற்றினையுடையதாகும்.

திருக்குறள், உலக மக்கள் அனைவர்க்கும் பொதுப்படையாக அமைந்த 'பொதுநூல்' 'பொதுமறை நூல்', 'வாழ்வியல் நூல்', 'வாழ்க்கை வழிகாட்டி நூல்', 'அறநெறி நூல்', 'அன்பு நெறி நூல்' 'அன்பு நெறிநூல்' 'நீதி நூல்', 'பண்பாட்டு நூல்', 'பொருளியல் நெறி நூல்', 'அரசியல் நெறி நூல்', 'ஒழுக்க நூல்', 'இன்பவியல் நெறி நூல்', அழியாச் சிறந்த இலக்கியமாகப் புகழுதற்குரிய 'பேரிலக்கிய நூல்' என்னும் பெருமை வாய்ந்தது' என்று திருக்குறளின் தன்மையையும், சிறப்பையும் சுட்டிக்காட்டிவிட்டுப் பேராசிரியர் மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை அவர்கள், 'வள்ளுவர்செய் திருக்குறளை மறுவற நன்கு உணரவேண்டும்' என்று வலியுறுத்தியதையும், நாவலர் நினைவுறுத்துகிறார். 'மறு' என்பது பரிமேலழகர் தம் உரையில் புகுத்தியுள்ள, எவராலும் ஒப்புக்கொள்ள இயலாத, சில கொள்கையைப் பற்றியதாகும். அந்த மறுவை நீக்கிவிட்டுத் திருக்குறளின் மெய்ப்பொருளைக் காணும் முயற்சியே இந்த உரைவிளக்கப் படைப்பின் முக்கிய நோக்கமாகும், என்று தமது முன்னுரையில் நூலாசிரியர் தெளிவுபடுத்தியுள்ளார்.

வடமொழியாளராகிய மனு, தமது சாத்திரத்தில் கூறுகின்ற 'தருமம்' என்பது வேறு; வள்ளுவப் பெருந்தகையார் திருக்குறளில் கூறுகின்ற 'அறம்' என்பது வேறு. மனுவின்படி மனிதகுலம் நான்கு வருணத்தாராகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வருணத்திற்கும் ஒவ்வொரு வகையான சட்டவிதியின் கீழ் நீதிகூறும் தன்மையதே 'தருமம்' ஆகும். ஆனால்

வள்ளுவரின் கருத்துப்படி, மனிதகுலம் அனைத்திற்கும் அன்புநெறி, அருள் நெறி, பண்புநெறி, ஒழுக்கநெறி போன்றவற்றின் கீழ் விதிக்கப்பட்ட கடமைகளின் தன்மையதே 'அறம்' ஆகும், என்று நாவலர் தமது முன்னுரையில் தெளிவுபடுத்துகிறார். அத்துடன் திருக்குறளுக்கும் மனுதர்ம சாத்திரத்திற்கும் இடையே உள்ள முரண்பாடுகளையும் சுட்டிக் காட்டுகிறார்.

எல்லா மக்களுக்கும் பிறப்பு என்பது ஒரே தன்மையாகத் தான் அமையும். பிறப்பைப் பொறுத்து ஏற்றத் தாழ்வு இல்லை என்னும் கருத்துப்பட **'பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்'** *(குறள் 972)*

என்று கூறுவது வள்ளுவரின் அறம் ஆகும். ஆனால்,

'பிராமணன் முதல் வருணத்தான் ஆனதாலும், பிரம்மாவின் முகமாகிய உயர்ந்த இடத்தில் பிறந்ததனாலும் எல்லா வருணத்தாருடைய பொருள்களையும் தானம் வாங்கத் தலைவனாகிறான்'.

*(மனு. த.சா. அ 1 சு. 100)*

**'பிராமணனுக்கு மங்கலத்தையும்,**
**சத்திரியனுக்கு வலுவையும்,**
**வைசியனுக்குப் பொருளையும்**
**சூத்திரனுக்குத் தாழ்வையும் காட்டுகிற**
**பெயரையே இடவேண்டும்'.**

*(மனு. த.சா. அ2. சு.31)*

'உலகத்தார், பல தொழில்களைச் செய்து பார்த்து, அலைந்து திரிந்து சுழன்று வந்தாலும், இறுதியில் ஏர்த்தொழிலின் பின்னேதான் நிற்கவேண்டியிருக்கிறது. அதனால், எவ்வளவு துன்பமுற்றாலும் உழவுத் தொழில் தான் தலைசிறந்த தொழிலாகத் திகழ்கிறது என்னும் கருத்துப்பட, **'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால் உழந்தும் உழவே தலை'** *(குறள் 1031)* **என்று கூறுவது வள்ளுவரின் அறம்.**

**'பயிர்த்தொழில் நல்ல தொழில் என்று நினைக்கிறார்கள். அந்தத் தொழில் பெரியோர்களால் மிகவும் இகழப் பட்டதாகும்.'**

*(மனு. த.சா.அ. 10 சு.84)*

**எந்த ஒரு பொருளைப் பற்றி எவரெவர் என்ன சொல்லக் கேட்டாலும், கேட்டவாறு அப்படியே அதனை ஏற்றுக் கொண்டு விடாமல், அந்தப் பொருளினுடைய உண்மையான பொருளைக் கண்டறிவதே அறிவுடைமையாகும் என்னும் கருத் துப்பட, ''எப்பொருள் யார்யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு'** (குறள்-423) என்று கூறுவது வள்ளுவரின் அறம் ஆகும்.

'ஆனால், 'வேதத்தைச் சுருதி என்றும், தருமசாத்திரத் தைச் சுமிருதி என்றும், அறியத்தக்கன. அவ்விரண்டையும் ஆராய்ச்சி செய்து மறுப்பவன் நாத்திகன் ஆவான்' என்று கூறுவது மனுவின் தருமம்.

**'பிராமணன் எத்தகைய குற்றங்கள் செய்தாலும், அவ னைத் தூக்குப் போட வேண்டிய நிபந்தனை ஏற்பட்டால், அவன் தலையை மட்டும் மொட்டையடிக்க வேண்டும். அதுவே அவனுக்குத் தூக்குத் தண்டனைக்கு ஒப்பாகும். மற்ற வருணத் தாருக்குக் கொலையே தண்டனை;'**

*(மனு த.சா.அ. 8சு. 379)*

**அரசனானவன் எத்தகைய குற்றத்திற்கும் பிராமணனைக் கொல்ல நினைக்கக் கூடாது'.**

*(மனு. த.சா.அ.8சு.381)*

இவ்வாறு மனுவுக்கும் வள்ளுவருக்கும் உள்ள கோட் பாடு வேறுபாடுகள் பலவற்றை நாவலர் சுட்டிக் காட்டியுள் ளார்.

பரிமேலழகர் உரை, பல பொதுப்படையான குறள்க ளைப் பொறுத்துச் சிறப்பாக வரவேற்கத் தக்கதாக இருந்த போதிலும், மனு முதலிய நூல்கள் விதித்தன செய்தலையும்,

விலக்கியவற்றை ஒழித்தலையும், வலியுறுத்தும் வகையிலும், சமய உணர்வோடும், சனாதன உணர்வோடும், அயலாரின் கொள்கைப் பற்றோடும் எழுதிய உரைப் பகுதிகள் அனைத்தும் புறக்கணித்து ஒதுக்கப்பட வேண்டியவைகளாகவே இருக்கின்றன. வள்ளுவர் நெறிக்கும், தமிழர் பண்பாட்டிற்கும், பகுத்து அறியும் ஆராய்ச்சி அறிவுக்கும் ஏற்ற முறையில் உண்மைப் பொருள் விளக்கம் காணும் பொருட்டு மேற்கொண்டுள்ள முயற்சிதான் இவ்வுரை விளக்கப் படைப்பாகும்.'

**இவ்வாறு தமது முன்னுரையில் நூலாசிரியர் தந்துள்ள விளக்கம் மிகவும் சிறப்புடையது. ஆய்வாளர்களின் சிந்தனைக்கு அரியதோர் தூண்டுகோல். இது வெறும் முன்னுரையல்ல. தெளிவுரைக்கு மகுடமாக அமைந்துள்ள பொன்னுரை.**

முன்னுரையில் தமது முந்தைய உரையாசிரியர்களின் பழைமைப் போக்கையும், திருவள்ளுவரின் அறநெறிக்கேற்ற தமது புதிய நோக்கையும் விளக்கிய பின்னர், தெளிவுரையைத் தொடங்கும் நாவலர் திருக்குறளின் முதல் அதிகாரத்திலேயே தமது முத்திரையைப் பதித்துவிடுகிறார்.

காலங்காலமாகக் 'கடவுள் வாழ்த்து' என்றே முதலாவது அதிகாரத்துக்குத் தலைப்பிட்டு உரையாசிரியர்கள் எழுதி வந்துள்ளனர். அந்த அதிகாரத்தில் உள்ள பத்துக் குறட்பாக்களிலும் ஒரு இடத்தில் கூட 'கடவுள்' என்ற சொல் கூறப்படவில்லை. ஆனாலும், அதற்குக் கடவுள் வாழ்த்து என்றே தலைப்பிட்டு விட்டனர். நாவலர் அதை மாற்றிக் 'கடவுள் வாழ்த்து' என்ற அதிகாரத்துக்கு 'அறிவன் சிறப்பு' என்ற தலைப்பிட்டு உரை விளக்கம் தந்துள்ளார். புதுமையும், புரட்சியும் ஆரம்பத்திலேயே அதிகாரம் செலுத்தத் தொடங்குகின்றன.

**நாவலரின் உரை விளக்கத்தால் இதுவரை இருந்து வந்த ஆதிபகவன் ஆட்டம் காண்கிறான்: அறிவுள்ள பகவன் (பகுத்தறிபவன்) ஆகிய அறிவன் அரியணை அமர்கிறான்.**

திருக்குறளின் மூன்றாவது அதிகாரம் இதற்கு முன்னர் 'நீத்தார் பெருமை' என்ற தலைப்பிலேயே இருந்து வந்தது. அதனைத் 'துறந்தார் சிறப்பு' எனத் தலைப்பிட்டு நாவலர் தெளிவுரை வழங்குகிறார்.

நீத்தார் என்றாலே உலகை வெறுத்து வாழ்வை வெறுத்து நீங்கிச் செல்பவர் எனப் பொருள் கொண்டு துறவுக் கோலத்தையே நம் கண்முன் பழையே உரையாசிரி யர்கள் காட்டிலர்.

நாவலர் துறவு மேற்கொள்வது வாழ்க்கையை வெறுப் பதற்கல்ல. நாட்டின் வாழ்வுக்காக, சமூகத்தின் முன்னேற்றத் திற்காகத் தன்னலம் துறந்து வாழ்தலே ஆகும் என விளக்கம் தந்து, அவ்வாறு துறவு மேற்கொள்வோர் சிறப்புக்குரியவரா வர் என்ற ஏற்புடைய கருத்தினை வழங்கித் தெளிவுறுத்துகி றார்.

திருக்குறளையும், திருவள்ளுவரையும் வட நூலாசிரியர் களின் கோட்பாடுகளுக்கு ஆட்பட்ட உரையாசிரியர்கள் தத்தம் கருத்துக்கேற்பப் படம் பிடித்துக் காட்டி அவரையும் ஒருசில வகைகளில் வெறும் புராணீகர் போல உருவகப்ப டுத்திக் காட்டிவிட்டனர். அதனால், புரட்சிச் சிந்தனையு டைய தமிழர்களில் சிலர் திருவள்ளுவரையும் தவறாகப் புரிந்துகொள்ள நேர்ந்தது. புதுமைக் கவிஞர் பாரதியாரிடம் கூடப் பழமைப்பிடிப்பு இருப்பதை, அது அவரது காலச் சூழலின் தாக்கம் எனக் கூறி அவரைக் காக்க முன்வரும் புரட்சியாளர்கள் கூட, வள்ளுவரைச் சாட முன்வந்தனர். அதற்குக் காரணமே முன்னைய உரையாசிரியர்கள் தந்த முரண்பாடான உரை விளக்கங்களேயாகும்.

நாவலரின் தெளிவுரையில் இந்த முரண்பாட்டுக்கு இடமில்லை. குறிப்பாக ஒரு குறளை அவர் தெளிவுபடுத்து வதைக் காணவேண்டும்.

'அறத்தாறு இதுஎன வேண்டா; சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தா னிடை'.

என்ற குறளுக்கு முன்பெல்லாம் தரப்பட்ட விளக்கம், பல்லக்கில் அமர்ந்து செல்பவன் அறம் செய்தவன் என்பதும், அப்பல்லக்கைத் தோளில் ஏந்திச் சுமந்து செல்பவன் அறம் பிழைத்தவன் என்பதும் ஆகும். இந்த விளக்கத்தினால் புரட்சியாளர்கள் பலர், குறிப்பாகப் பொதுவுடைமைவாத அன்பர்கள் சிலர் வள்ளுவர் செல்வந்தனைப் புண்ணியன் என்றும், உழைப்பவனைப் பாவி என்றும் கூறிவிட்டார் என்று புண்பட்டு, எழுதிப் பேசலாயினர். அத்தகைய கருத்துத்துடையோருக்கும் தெளிவூட்டும் வகையில் நாவலரின் உரை அமைந்துள்ளது. நாவலர் கூறுவது:

**'சிவிகை பொறுத்தானோடு, ஊர்ந்தான் இடை, இது, அறத்தாறு' என வேண்டா.**

பல்லக்கைச் சுமந்து செல்பவனுக்கும், அதில் வீற்றிருப்பவனுக்கும் இடையே உள்ள வேறுபாட்டைச் சுட்டிக் காட்டி, இந்த நிலையானது, அறம் செய்யாமைக்கும், செய்தமைக்கும் உள்ள அறநெறிப் பயனின்மை — பயன் ஆகியவற்றை உணர்த்துவதாகும் என்று கூறக் கூடாது.

சுமத்தல், பல்லக்கில் வீற்றிருத்தல் ஆகியவை, பாவ—புண்ணியங்களின் விளைவு என்னும் வைதிக அயலார் கொள்கையை வள்ளுவர் இக்குறளில் மறுக்கிறார்.

அறத்தாறு (அறத்தின் பயன்) என்பது வேறு. திறத்தாறு (திறமையின் பயன்) என்பது வேறு. 'மடாதிபதிகள்-கார்-முதலாளிகள்-மாளிகைவாசிகள்-கள்ள வணிகர் ஆகிய அனைவரும் அறம் புரிந்தவர்கள் என்றும், அவர்களுக்குக் கீழே முறையே பணிபுரியும் எடுபிடிகள்—கார் ஓட்டுநர்கள்—மாளிகைக் காவல்காரர்—வேலைக்காரர்— ஊழியர்கள் அனைவரும் அறம் புரியாதவர்கள் என்றும் கொள்ளுவது எப்படிப் பொருந்தும்?

வள்ளுவர் அறத்தின் சிறப்பியல்புகளை குறள்கள் — *8, 31, 32, 35, 36 38, 39, 46, 93, 96, 185, 249, 288, 296, 297, 501, 1018, 1047* ஆகியவற்றில் தெள்ளத் தெளிவாக விளக்குகிறார். திறத்தின் வகைகளையும் கூறுபாடுகளையும் 'ஊக்கம் உடைமை' *(அதி.60)* மடி இன்மை அதி.61) ஆகியவற்றில் தெளிவுபடுத்தியுள்ளார்.

துன்பம் என்பது அறம் செய்யாதவர்க்கு மட்டுந்தான் வரும் என்பதில்லை. அறஞ்செய்வோர்க்கும் அது கேடு உண்டாக்கும் என்பதை 'நன்றிக்கண் தங்கியான் வாழ்வு', சீருடைச் செல்வர் சிறுதுனி (வறுமை), 'கேடும் பெருக்க மும் இல் அல்ல, 'நயனுடையான் நல்கூர்ந்தான் ஆதல்' 'ஒப்புரவினால் வரும் கேடு எனினும்' என்பன போன்ற வள்ளுவரின் வாய்மொழிச் சொற்களே சான்று பகரும்.

'அறத்தாறு', 'திறத்தாறு' ஆகிய இரண்டையும் போட் டுக் குழப்பக் கூடாது என்பது வள்ளுவர் கொள்கை.

**கருத்துரை: பல்லக்கைச் சிலர் சுமக்க, அது அவர்கள் பாவம் செய்ததையும், அதன் மேல் ஒருவன் வீற்றிருக்க அது அவன் 'புண்ணியம் செய்ததையும்' காட்டும் என்பதை உணர்த்தி இதுதான் அறநெறித் தத்துவம் என்று ஒருபோதும் கூறக்கூடாது. இதுதான் வள்ளுவரின் கருத்து என நாவலர் தெளிவுபடுத்துகிறார்.**

'அதுதான் (அவ்வொழுக்கம்) நால்வகை நிலைத்தாய் வருணந்தோறும் வேறுபாடுடைமையின், சிறுபான்மையா கிய அச்சிறப்பு இயல்புகள் ஒழித்து, எல்லார்க்கும் ஒத்தலின் பெரும்பான்மையாகிய பொதுவியல்பு பற்றி இல்லறம் துறவறம் என இருவகை நிலையால் கூறப்பட்டது' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

'பிராமணன் முதல் வருணத்தான் ஆனதாலும், பிரம்மா வின் முகமாகிய உயர்ந்த இடத்தில் பிறந்ததனாலும் எல்லா வருணத்தாருடைய பொருள்களையும் தானம் வாங்கத் தலைவனாகிறான்'. *(மனு. த.சா. அ1. சு.100)*

நாவலரின் உரை விளக்கத்தால் இதுவரை இருந்துவந்த ஆதிபகவன் ஆட்டம் காண்கிறான்; அறிவுள்ள பகவன் (பகுத்தறிபவன்) ஆகிய அறிவன் அரியணை அமர்கிறான்.

நாவலர், துறவு மேற்கொள்வது வாழ்க்கையை வெறுப்பதற்கல்ல. நாட்டின் வாழ்வுக்காக, சமூகத்தின் முன்னேற்றத்திற்காகத் தன்னலம் துறந்து வாழ்தலே ஆகும் என விளக்கம் தந்து, அவ்வாறு துறவு மேற்கொள்வோர் சிறப்புக்குரியவராவர் என்ற ஏற்புடைய கருத்தினை வழங்கித் தெளிவுறுத்துகிறார்.

இதுபோன்ற வேறு பல குறட்பாக்களுக்கும் புதிய விளக்கம் தந்துள்ளார்.

**தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்**
**பெய்எனப் பெய்யும் மழை'** (குறள்-55)

வான்புகழ் கொண்ட மேலான ஒருவர் என்ற காரணத்திற்காக வேறு எவரையும் பின்பற்றி நடக்காமல், தன் கணவனை மட்டுமே எண்ணி, அவனுக்கு ஏற்றபடி அவனைப் பின்பற்றி நடப்பவள் பெய்ய வேண்டும் என்று விரும்பும் காலத்தே பெய்யும் மழையைப் போன்றவள் ஆவாள்.

**'வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி**
**மிச்சில் மிசைவான் புலம்,** (குறள்-85)

(வந்த விருந்தினரை உண்பித்து, மிஞ்சிய உணவைத் தான் உண்பவனது நிலத்தில், விதைத்த விதைக்கு வேலிபோட்டா காக்க வேண்டும்? (ஊராரே கண்காணிப்பாராதலால் வேண்டுவதில்லை)

இவ்வாறு பல்வேறு குறட்பாக்களுக்குப் புதிய நோக்குடன் விளக்கம் தந்து, எந்தத் தலைமுறையும் ஏற்கும் வண்ணம் தெளிவுரை தந்துள்ளார் நாவலர்.

**நாவலரின் விளக்கவுரை மருள் நீக்கும் தெளிவுரை; மயக்கம் போக்கும் புதுவுரை; வள்ளுவரின் அறம் காக்கும் நெறியுரை.**

ஆய்வாளர்களுக்கும், அறிவாளர்களுக்கும் பயன்படும் அரியதோர் நூல் இது. பல்கலைக் கழகங்களுக்குப் பயன்படும் வகையில் நடமாடும் பல்கலைக் கழகம் நாவலர் தந்த நன்னூல் இது. மற்ற உரைநூல்களுக்கெல்லாம் இல்லாத ஒரு தனிச் சிறப்பு இந்நூலுக்கு உண்டு. மற்ற உரையாசிரியர்கள் அனைவரும் பெரும் புலவர்களாகவும், பேராசிரியர்களாகவும் இருந்தோரேயாவர். இந்த உரையாசிரியர் அரசியல், ஆட்சியியல், அமைச்சியல் ஆகிய அனைத்தையும் நடைமுறையில் கண்ட அமைச்சர் ஆவார். எனவே, அமைச்சர் ஒருவரால் எழுதப்பட்டது என்பதே இந்நூலுக்குரிய தனிச் சிறப்பு என்றும், இதனை எழுதி முடித்து வெளியிட்டதன்மூலம் நாவலர் வரலாற்றில் நிலைத்த புகழ் எய்திவிட்டார் என்றும் உவமைக் கவிஞர் சுரதா உவப்புடன் வியந்து போற்றினார்.

திருக்குறளுக்கு உரைகள் பல, பழையனவாகவும், புதியனவாகவும் வந்திருந்த போதிலும், நான், இந்நூலின் மூலம் உரை விளக்கம் தர முன்வந்திருப்பதற்குக் காரணம், குறட்பாக்களின் உண்மைப் பொருளைப் பகுத்து ஆராய்ந்து பார்க்கும் கண்ணோட்டத்தோடு, இனிய, எளிய, நல்ல தெளிவான, தமிழ் நடையில் உணர்த்துவதன் மூலம், கீழ்க்காணப்படும் கருத்துக்களுக்கு நல்ல தெளிவு நிலை ஏற்பட வேண்டும் என்பதேயாகும், என்று தமது குறிக்கோளை முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார் நாவலர். அவரது சீரிய நோக்கம் இந்நூலின் மூலம் நிறைவேறிவிட்டது; நிலைபெற்றுவிட்டது.

***தமிழிருக்கும் வரை குறளிருக்கும். குறளிருக்கும் வரை இவ்வுரை இருக்கும். இவ்வுரை இருக்கும் வரை நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் பெயரும் நிலைபெற்று நீடுபுகழ் எய்தி நிற்கும்!'***

# நாவலரின் நாவன்மை

**(16.12.1963 இல் 'அரவிந்தம்' என்ற இதழின் கட்டுரைப் போட்டிக்கு வந்த கட்டுரைகளில் இதுவே நாவலரைப் பற்றிய 'சிறந்த கட்டுரை' என்று தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்த ஏட்டில் வெளியிடப்பெற்றது. திரு. நல்லரசு அவர்கள் பச்சையப்பன் கல்லூரியில் எம்.ஏ. இரண்டாம் ஆண்டு மாணவராக இருந்த போது எழுதியது இது.**

நாவலர் என்றால் நாவன்மை உள்ளவர் என்று கூறுவதை விட, இரா. நெடுஞ்செழியன் என்று பொருள் கூறும் நிலையில் இன்றைய தமிழகத்தில் நாவலர் என்ற சொல் நெடுஞ்செழியன் அவர்களுடன் உறவு கொண்டு இரண்டறக் கலந்து விட்டது. தாம் கற்றதை மற்றவர்க்கு உரைக்க வேண்டும். அவர்கள் உளங்கொள்ளும் அளவுக்கு எளிமை யும் இனிமையும் பொருள் தெளிவும் மிளிர உணர்த்த வேண்டும். இல்லையேல் ஒருவர் எவ்வளவு கற்றிருப்பினும் அவர், முற்றும் மலர்ந்தும் முகர்வதற்கு ஒன்றுமில்லா வெற்றுக் கொத்து மலர்க்கு ஒப்பாவர் என்று நாவன்மை யற்ற ஆனால் நாலும் கற்றிருப்போரைப் பற்றி வள்ளுவர் கூறுகிறார்.

புலமைச் செறிவு; புரியவைக்கும் திறன்;' சொல்வளத்தின் சுவை; எதுகை மோனைகளின் முத்தமும் மோதலும்; நடைமிடுக்கு; நகைச்சுவை எடுப்பு; துள்ளிவரும் புள்ளி விவரம்; இலக்கிய இனிமை; இன்ன பிறவற்றுடன் குரலின் இனிமையும் எடுப்பும் இணைந்து நின்று, கேட்டாரைப் பிணித்து வைத்து, கேளாதாரை வேட்கை கொண்டு விரைந்து வரச்செய்யும் தனியாற்றல் நாவலரின் சொல்லாற்றல்.

மேடையில் நெடுஞ்செழியன் தோன்றும் காட்சியே ஒரு தனிக் கவர்ச்சி தான். அவருடைய நாவின் கவர்ச்சி நற்றமிழின் மறுமலர்ச்சி எனலாம். எட்டுவகை மெய்ப்

பாட்டு உணர்ச்சிகளையும் ஊட்டக்கூடியதாக இருக்கும் நாவலரின் பேச்சு. நகைச்சுவை நடனமிடும். ஆனால் வெறுப்பு நையாண்டியாக அமைந்துவிடாது; வீரமுண்டு; வீண் வெகுளி கிளம்பாது - சில ஏற்ற இறக்கங்கள் எழில் பொங்க ஒலிக்கும். தமிழ்மொழி இலக்கணத்தின் 'ஏ' கார அழுத்தத்தின் ஏற்றம் நெடுஞ்செழியனின் நாவில் தான் எடுப்பாக மிளிரும். இலக்கணத்தில் இல்லாத, நாவலரின் தனியான முத்திரை பெற்ற அழுத்தங்கள், சில தனித் தன்மையுடன் எழிலும் சுவையும், பொருட் செறிவும் கொண்டு விளங்கும். எந்த இடத்தில் அந்த அழுத்தம் எப்படி இடம்பெறும் என்று நமக்குத்தெரியாது. ஆனால் வருகின்ற இடம் எதுவாயினும் நம்மால் சுவைக்காமல் இருக்கமுடி யாது. அது நாவலர் அழுத்தம். நம்முடைய அழுத்தமல்ல.

கல்லாரும், கற்றோரும் கலந்து நிற்கும் அரசியல் மேடை யில் எல்லோரையும் ஈர்க்கும் வகையில் பேச்சு அமையும். அரசியல் மேடையில் பூகோளப் பாடம் கூட 'போர்' நீங்கிச்சுவையுடன் நெஞ்சத்தில்பதியும், துறைமுகங்களின் பெயர்களை, விசாகப் பட்டினம், நாகப்பட்டினம், மசூலிப் பட்டினம், சென்னைப்பட்டினம், கொல்லம், கொச்சி, குளச்சல், கோழிக்கோடு என்று சொல்லடுக்கோடு சுவை யூட்டிச் சொல்லும்போது நமக்கு இவர் ஆசிரியராக அமைந் திருந்தால் பூகோளத்தை இப்படி வெறுத்திருக்க மாட் டோமே என்ற எண்ணம் பிறக்கும்.

ஆளும் கட்சிக்கு ஆதரவாக நிற்போரின் பட்டியலைத் தருவார். அப்போது அவர் தரும் ஏற்றமும் அழுத்தமும் சுவையை ஏற்றி இன்பத்தை அளித்து நம்மைச் சொக்க வைக்கும், நகைச் சுவையும் நடமிடும். ஏற்றுமதி பெர்மிட் காரர்கள், இறக்குமதி பெர்மிட்காரர்கள், ஆலை அரசர்கள், தொழிற்சாலை அதிபர்கள், கோமான்கள், பூமான்கள், சீமான்கள், மிட்டாக்கள், மிராசுகள், பட்டக்காரர்கள், பாளையக்காரர்கள் என்பதோடு ராஜா சர்...ர்...ர் கள்' என்ற

இழுத்து ஏற்றி சருக்குவிடுகின்ற போது பொருட்சுவையும் நகைச்சுவையும் போட்டி போடும்.

தமிழ்ப்பற்று குறைந்தவர்கள் என்று தி.மு.க வினரைச் சிலர் சொன்னபோது விடையளித்தார் நாவலர். ''தமிழ்ப் பற்றைப் பொறுத்தவரை தி.மு.க. வினரை 'மீ—றி' ஒருவ னும் போய்விட முடியாது; தொண்டாற்றிடவும் முடியாது. இப்போது 'புது...சா...க' சிலர் தமிழுக்காகப் பிறந்தவர்கள் தாமேதாம் என்று கூறி அலைகிறார்கள் என்று கூறி முடித்தார். அரசியல் மேடையில் கண்ணியம் குறையாமல் கருத்தைக் கவர்ச்சியாக வெளியிடுவார்.

இலக்கிய இன்பம் எப்படிப்பட்டது என்று சொல்ல வருவதற்கு முன்னர் ஐம்புலச் சுவைகளைப் பற்றிக் கூறி முடித்துவிடுவார். பிறகு, ''கண்ணகி கணவனை இழந்து கதறி அழுகின்ற கட்டத்திலும், 'இளங்கோ இந்த இடத்தை நல்லா எழுதியிருக்கார்டா', என்று சொல்லிக்கொண்டே படிப்பவன் இப்படி அழுகின்ற கட்டத்திலும், உனக்குச் சுவையூட்டி நிற்பதுதான் இலக்கியம்'', என்பார் நாவலர்,

நாவலரின் பேச்சைக் கேட்கநேர்ந்தால் ஒரு நாடகத்தைப் பார்ப்பது போல் ஆளையும், அவர்தம் அங்க அசைவுகளை யும் காணவேண்டியதிருக்கும். சில இடங்களில் நாவுக்குப் பதில் சில கை அசைவுகளே பேசிக் கருத்தை வெளியிடும். நெஞ்சில் ஈரமற்றுப் பொருள் சேர்த்துப் பிறர்க்கு ஈயாது, எச்சில் கரத்தால் காக்கையும் விரட்டமாட்டான் என்ற நிலையிலுள்ள கஞ்சனை, கையை மடக்கிக்கொண்டு கன் னத்தில் ஒரு குத்து விட்டால்தான் எச்சில் கையையாவது உதறுவான் என்ற கருத்து அமைந்த குறளின் இறுதிப் பகுதியைச் சொல்லுகின்ற போது, கூன் கை அல்லாதவர்க் கு,' என்ற சொற்களுடன் நாவலரின் கரமும் கூனாகிக் குறுகி வளைந்து குத்துவதற்கு முன்வந்து நின்று பொருளை விளக்கும்.

இலக்கிய இன்பம் எப்படி இருக்கும் என்றால், நாவலரின் பேச்சுப்போன்று இருக்கும் என்றே சொல்லலாம். இலக்கிய இன்பம் நாவலரின் சொல்லாக உருவெடுத்து நம் செவிவழி புகுந்து சிந்தையைக் குளிர்விக்கிறது எனலாம். ''எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு,'' என்ற புரட்சிக் கவிஞரின் பாடலைச் சொல்லும் போது நெடுஞ்செழியன் அதைச் சொல்லுவதாகக் கொள்ள முடியாது. அங்கே சங்குதான் முழங்கும்.

தமிழ் இலக்கியப் படைப்புக்களைப் புத்தக உருவில் காண்கிறோம். அவற்றுக்கு நாவலர். இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தரும் விளக்கவுரைகளை, இன்ப உரைகளை ஒலிப்பதிவு செய்து, இவ்விலக்கியங்களுடன் அவை தரும் இன்பத்தையும் வாழவைப்பது, நாவலர்க்குப் பெருமை என்று சொல்லுவதைவிட நமக்கு நன்மை, தமிழின்பத்திற்கு ஒரு நிலையான ஊற்று எனலாம்.

நாவலர் சொலல் வல்லார்
சோர்வு இல்லார்
அவர் இகல் வெல்வார்
ஏற்றம் பெறுவார்!

சி. நல்லரசு எம்.ஏ.பி.டி.

எழுதியவர்

சி.நல்லரசு எம்.ஏ.பிடி.

வெளியிடுவோர்

டாக்டர் நாவலர் பிறந்தநாள் விழாக்குழு

சென்னை